செம்மண்

நிலம் 3 துகள் 158 வள்ளுவர் ஆண்டு 2052, 29 ஆடி - 04 ஆவணி 2023 வாரமலர் பக்கங்கள் 16

# ஆயுத அதிகாரம் தமிழருக்குத் தரப்படாது...!

வைரீசன்



தற்போது பேசுபொருளாக உள்ள 13இல் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் காவல்துறை அதிகாரத்தைத் தமிழர் தரப்புக்கு வழங்குவதா இல்லையா என்ற வாதப்பிரதிவாதம் முக்கியமானது. 30வருட கால ஆயதப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் கையில் மீண்டும் ஆயுதங்களை வழங்கினால் நிலமை எப்படி மாறும் என்பது ஆட்சியாளர்களுக்கும் இந்திய அரசுக்கும் நன்கு தெரியும். புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்ற 13ஆயிரத்து 600போராளிகளை 2009இல் போர் முடிவுற்ற பின் மகிந்த அரசு ஐ.நாவின் நிதிப்பங்களிப்புடன் மறுவாழ்வளித்து அவர்களின் குடும்பங்களுடன் இணைத்தது என்ற உத்தியோகபூர்வத் தரவும் உண்டு. எனவே தமிழ் இளைஞர், யுவதிகளின் கையில் இனி எந்த விதத்திலாவது ஆயுதங்கள் தவழ்வதை ஒருபோதும் இலங்கை அரசு விரும்பப்போவதில்லை.

**ரணிலின் தந்திரம்**

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் 13ஐ நடைமுறைப்படுத்தினாலும்கூடக் காவல்துறை அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் நான் மட்டும் தீர்மானம் எடுக்க முடியாது என்றும் தமிழ்த் தலைவர்களுடன் மாத்திரம் கதைத்து முடிவுகளை எடுக்க முடியது, இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளிடனும் பேசியே முடிவெடுக்க வேண்டும் என்றும் பன்னாட்டுச் சட்டங்களுக்கு இணங்க நான் செயற்படுவதுபோலதான் இந்த விடயத்தையும் செயற்படுத்த வேண்டும் என்ற பாங்கில் அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை முன்வைத்திருக்கிறார்.
மாகாணசபை அதிகாரங்கள் பற்றிய விடயத்தில் இலங்கையில் உள்ள 9மாகாணங்களில் 7 மாகாணங்கள் சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்டிருப்பதால் இதுவிடயத்தில் விரிவாக ஆராயப்படுவது அவசியம் என்று ரணில் பல்டியடிப்பதும், அதுபற்றித் தான் தீர்மானிக்க முடியாது நாடாளுமன்றமே இதுவிடயத்தில் தீர்மானம் எடுக்க முடியும் என்றும் திட்டவட்டமாகக்

கூறுவதுமே நடக்கும்.

**விக்னேஸ்வரனின் கோலாட்டம்**

13இனதும், ரணிலின் அதுபற்றிய முடிவும் இவ்வாறிருக்க, முன்னாள் நீதியரசரும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் இதுகுறித்துக் கருத்துரைக்கையில், வடக்கு மாகாணத்துக்கு ஆயுதம் இல்லாத காவல்துறை அதிகாரத்தைத் தமிழ் நாட்டுப் பாண்டிச்சேரிப் பாணியில் வழங்க முடியும் என்று அரசதலைவர் ரணிலுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். இந்தக் கூத்து இவரது இறுதிக்காலம் வரை அரசியல் நடத்துவதற்குப் போதுமானதே தவிர வடக்குக் கிழக்கு மக்களின் பிரச்சினைகளையோ ஏனைய நெருக்கடிகளையோ தீர்ப்பதற்கான நிர்வாக முறைமையாக இருக்கப்போவதில்லை. அன்றாடம் வடக்குக் கிழக்கில் நடக்கும் குற்றச் செயல்கள் தொடர்பான செய்திகளைக்கூட விக்னேஸ்வரன் அறிந்திருக்கவில்லை என்பதே இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

**யாழின் நிலமை...!**

வாள்வெட்டு, போதைப் பொருள் பாவனை, சாதிக்கலவரங்கள், ஆட்கடத்தல்கள், கொள்ளை, கொலை ஆகிய குற்றச் செயல்கள் மலிந்துள்ள வடக்குக் கிழக்குப் பகுதியில் வெறும் தடியை வைத்துக் காவலர்கள் கோலாட்டம் போட முடியுமே தவிர குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை இதன் மூலம் கட்டுப்படுத்தப் போவதில்லை. குற்றச்செயல்களில் ஈடுபடுவோரிடம் கூரிய ஆயுதங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், பெற்றோல் குண்டுகள் என ஆபத்தான ஆயுதங்கள் இருப்பதால், வெறும் தடிகள், பொல்லுகளை வைத்து இவற்றை ஒருபோதும் கட்டுப்படுத்தமுடியாது.



> அவர்களின் அட்டகாசங்களால் பலர் கொல்லப்பட்டனர். இதற்கு அஞ்சிய இளைஞர்கள் வன்னிக் காட்டுக்குள் புலிகளின் இடத்தைத் தேடிப் பாதுகாப்புக்காக ஓடினர். இது இந்தியாவும் அதனுடன் சேர்ந்தியங்கிய ஒட்டுக்குழுக்களும் எதிர்பார்க்காத ஒன்று

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் ஆயுதக் களைவு**

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் புலிகளின் ஆயுதங்களைக் களைவதை ஒரு நிபந்தனையாகக் கூறப்பட்டுள்ளது. அதனால் புலிகளும் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கையளித்தார்கள். ஆனால் இந்திய அரசு புலிகளுக்கு எதிரான போக்குடைய ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், புளொட், ரெலோ ஆகிய அமைப்புகளுக்கு ஆயுதம் வழங்கிக் களத்தில் இறக்கியது. இந்தியப் படைமுகாம்களில் அவர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அவர்களின் அட்டகாசங்களால் பலர் கொல்லப்பட்டனர். இதற்கு அஞ்சிய இளைஞர்கள் வன்னிக் காட்டுக்குள் புலிகளின் இடத்தைத் தேடிப் பாதுகாப்புக்காக ஓடினர். இது இந்தியாவும் அதனுடன் சேர்ந்தியங்கிய ஒட்டுக்குழுக்களும் எதிர்பார்க்காத ஒன்று. இதனால்தான் அந்த நாள்களில் புலிகளைப் பெரிசு என்றும் ஏனைய இயக்கங்களை ஒட்டுக்குழுக்கள் என்றும் மக்கள் அழைத்தார்கள்.

அதன் பின்னர் இந்தியப் படை வெளியேறியது தொடக்கம் 2009 மே மாதம் வரை ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது. பல்லாயிரக்காணக்கான இளைஞர், யுவதிகள் பல்வேறுபட்ட ஆயுதங்களைக் கையாளப் பழகியிருந்தனர். இத்தகைய ஆயுதக்கலாசாரம் இன்றுவரை பல்வேறுபட்ட சமூகப் பாதிப்புகளைத் தமிழர் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் நிலையில் தமிழரிடம் ஆயுதம் தாங்கிய காவல் படை ஒன்றை அனுமதிப்பது என்பது மீண்டும் தமி ழர் சிதைவுக்கே வழிவகுக்குமே தவிர புலிகளைப் போன்ற கட்டுப்பாடான ஆயுத நடவடிக்கையாக இருக்கப்போவதில்லை.

தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப்போராட்டத்தை மிகவும் சிரமப்பட்டு வெற்றி கண்ட சிங்கள இனம் இனியும் தமிழருக்கு ஆயுதம் வழங்கும் முடிவை எடுத்தால் தலையில் மண் அள்ளிப்போடும் விடயமாகவே அது இருக்கும். அதற்குப் பதிலாகத் தடியைக் கையில் வைத்துக்கொண்டு தமிழ்ச் சமூகத்தை ஒழுங்குபடுத்திவிட முடியும் என விக்னேஸ்வரன் கூறுவதும் நடைமுறைக்குதவாதது.

# "மிக நெருங்கிய நண்பர்களைப்போல எங்களை நடத்தினார்கள்"

மொழியாக்கம்
கமலநாதன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

தாக்குதலின்போது எங்களைச் சிறைப்பிடித்த கடற் புலிகள் இருந்த முகாமுக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். கனகபுரத்திலிருந்து புறப்பட்டு 3மணி நேரப் பயணத்தின் பின் அங்கு போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்த பெண் புலிகள் சிங்களத்தில் நன்றாகக் கதைத்தார்கள். அங்கே இரவு உணவாகக் கடலை சாப்பிடத் தந்தார்கள். அப்போது கதைத்த கடற்புலிகள், "பொடி எண்டாலும் சுட வேண்டாம் என்று லொக்கா கூறியதால்தான் உங்களைச் சுடாது பிடித்தோம்" என்று கூறினார்கள். நாங்கள் கடலில் குதித்திருந்தால் செத்திருப்போம். அவர்கள் எங்களை மிக நெருங்கிய நண்பர்களைப்போல நடத்தினார்கள்.

புலிகள் அமைப்பிலிருந்து தப்பி ஓடியவர்களையும் பிடித்து நாங்கள் இருந்த கனகபுரம் வீட்டுச் சிறையில் அடைத்திருந்தார்கள். அவர்கள் எங்களுடன் கதைக்கும்போது தங்களுக்கு எல்லாமே வெறுத்துவிட்டது. என்று விரக்தியுடன் கதைப்பார்கள். இரவு நேரங்களில் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் வந்து டோர்ச் லைற் அடித்து எங்களைப் பார்ப்பார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட எங்களை அங்கு வந்து பார்த்திருந்தால்கூட எங்களுக்குத் தெரியாது. எமது அறை இருட்டாக இருந்ததால் அங்கு யார் வருகிறார்கள்... போகிறார்கள்... என்று தெரியவில்லை.

குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள், புலிகள் அமைப்பிலிருந்து தப்பி ஓடியவர்கள் என 20பேர் வரையில் எங்களுடன் அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்



**தப்பி ஓட முயற்சித்த புலிகள்...!**

குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள், புலிகள் அமைப்பிலிருந்து தப்பி ஓடியவர்கள் என 20பேர் வரையில் எங்களுடன் அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அங்கிருந்து தப்பியோடுவதற்கு முடிவெடுத்தார்கள். எங்களையும் தம்முடன் வருமாறு கேட்டார்கள். நாங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர்கள் தப்பி ஓடும் முயற்சியின்போது அங்கிருந்த பெரிய மாமரத்தில் முதலில் ஏறினார்கள். அதைச் சார்ஜன் மணியம் கண்டு பிடித்துவிட்டார். இதனால் அவர்கள் அனைவருக்கும் வயர்களால் சரமாரியாக அடித்தார்கள்.

கனகபுரம் சிறையில் செபமாலை என்றொருவர் கைதியாக இருந்தார். அவர்தான் எமக்குச் சாப்பாடு கொண்டு வந்து தருவார். எங்களுடன் மிகவும் ஆதரவாக நடந்து கொள்வார். சாப்பாட்டுக்குக் கறி சரியில்லை என்றால் வெங்காயத்தை உரித்துப் புட்டுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு வந்து தருவார். அவரது பிள்ளை ஒருவரை இயக்கத்துக்கு அனுப்பவில்லை என்ற குற்றச்சாட்டில் ஒன்றரை வருடங்களாக அவர் சிறையில் இருந்தார்.

**ஆனந்தபுரம் சிறைச்சாலை**

கனகபுரம் சிறைச்சாலையில் இருந்து கைதிகள் ஓட முற்பட்ட சம்பவம் நடந்த பின்னர் ஒருநாள் மூடப்பட்ட கென்டனைர் ஒன்றில் எங்களை ஏற்றி ஆனந்தபுரம் பகுதிக்குக் கொண்டுபோனார்கள். பாதுகாப்புப் பகுதியாக அப்போது அரசு அறிவித்த இடங்களில் சிறைச்சாலைகளை அமைத்தார்கள். அவற்றை அடிக்கடி மாற்றிக் கொண்டுமிருந்தார்கள். ஆனந்தபுரத்திலிருந்து வட்டு வாகலைச் சென்றடையும் வரை 8 சிறைச்சாலைகளில் எங்களை மாற்றி மாற்றி அடைத்தார்கள்.

**பாதுகாப்பு வலயத்துக்குள் எல்லோரும் அனுமதிக்கப்படவில்லை**

"சேப்ரி ஏரியா" (பாதுகாப்பு வலயம்) என்று அரசு அறிவித்த பகுதிகளுக்குள் எல்லா மக்களையும் புலிகள் அனுமதிக்கவில்லை. மக்கள் அந்த இடங்களுக்குள் செல்லாதபடி பல முனைக ளிலும் ஆயுதம் தாங்கிய

புலிகள் நின்று தடுத்தார்கள். ஆனந்த புரம் பகுதியில் நிலத்துக்கு அடியில் சிறைச்சா லைகளை அமைத்துக் கிபிர், ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளாகாதபடி மண் மூடைகளை மேலே அடுக்கியிருந் தார்கள். முல்லைத் தீவுத் தாக்குதலின்போது கால் ஒன்றை இழந்த முன்னாள் போராளியான குமார் என் பவரும் எங்களுடன் கைதியாக வைக்கப்பட்டிருந்தார். அவர் எங்களைப் பார்த்து, ஒண்டுக்கும் பயப்பிடா தேயுங்கோ துப்பாக்கிசூட்டுச் சத்தம் கிட்டக் கேக்குது எப்படியும் ஆமி வந்து எங்களைக் காப்பாற்றுவான் - என்று அடிக்கடி கூறுவார்.

2009 பெப்ரவரி மாதம் புலிகளின் பயிற்சி முகாம்களின் மீது பகல் 11மணியளவில் வானூர்தித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அப்போது நாமிருந்த சிறைச்சாலைப் பகுதியில் மண் அரண் உடைந்து விழுந்தது. அதில் மண்ணுக்குள் புதைந்துபோன குமார் வெளியே வர முடியாமல் அவஸ்தைப்பட்டார். கைவிலங்கு போட்டபடி இருந்ததால் எங்களால் அவருக்கு உதவ முடியவில்லை. அவரை வெளியில் எடுக்குமாறு கத்தினோம். அவரை வெளியே எடுத்தபோது காலில் காயப்பட்டிருந்தார். பின்னர் எங்களைச் சுனாமி வீட்டுத்திட்டப் பகுதிக்கு மாற்றினார்கள். அவருக்கு மருந்து கட்டப் புலிகளிடம் மருந்துகள் எவையும் இருக்கலில்லை. அந்த வீட்டில் கிடைத்த உப்புப் பைக்கற்றை எடுத்து அதை நனைத்து அவரது காயங்களுக்குக் கட்டினோம். பத்து நாள்கள் வரை அதனுடனேயே இருந்தார். பின்னர் நடந்த ஒரு தாக்குதலின்போது குமார் மண்ணில் மூடப்பட்டார். மிகவும் சிரமப்பட்டு மண்ணைத் தோண்டி அவரை வெளியில் எடுத்தபோது மூச்சு எடுக்க முடியாமல் இறந்துபோனார். அது எங்களை மிகவும் துக்கத்தில் ஆழ்த்தியது.

பின்னர் எங்களைக் முள்ளிவாய்க்கால் பகுதியில் கப்பல் கரையோதுங்கியிருந்த இடத்துக்கு மாற்றினார்கள். அப்போது மிக அருகில் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. நந்திக்கடலுக்கு அருகில் எங்களை வைத்திருந்த போது கிபிர், எறிகணை, மோட்டார் தாக்குதல்கள் என எவையும் இருக்கவில்லை. அப்போது கடற்படையைச் சேர்ந்த 4பேரும் படைச் சிப்பாய் ஒருவருமாக 5பேர் கைதிகளாக இருந்தோம்.

**பொதுமக்கள் வந்தார்கள்**

எம்மைத் தடுத்து வைத்திருந்த இடத்துக்கு 2009 மே 17ஆம் திகதி காலையில் பெருமளவு பொதுமக்கள் வந்தார்கள். அவர்கள் களப்புக்குள் இறங்கி வட்டுவாகல் பாலத்தினூடாகப் படைக் காட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல முற்பட்டார்கள். அப்போது புலிகள் துப்பாக்கியால் சுட்டார்கள். மக்கள் தமது பொருள்களையும் எடுத்துக் கொண்டு பெருமளவில் வந்ததால் எமது கைவிலங்குகளைப் புலிகள் கழற்றி விட்டார்கள். நாங்கள் மக்களோடு மக்களாக நடந்து படைமுகாம் நோக்கிச் சென்று அங்கு நின்ற சிப்பாயிடம் யார் என்று கூறினோம். அவர் அதை நம்பவில்லை. அதுபற்றிப் பின்தளத்துக்கு அறிவித்தார். பின்னர் படை அதிகாரியான பிரசன்ன சில்வா எங்களைப் பொறுப்பெடுத்தார்.

சிறைச்சாலைக்குப் பொறுப்பாக நின்ற புலிகளையும் நாம் அழைத்துச் சென்றோம். 59ஆவது படைப்பிரிவினர் எங்களுக்குச் சாப்பாடு தந்தார்கள். எம்முடன் வந்த புலிகளை வேறாக ஓரிடத்துக்கு அனுப்பிவிட்டார்கள். மே 17ஆம் திகதி எமக்கு விடுதலை கிடைக்கும் என நாங்கள் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எம்மைக் கடற்படைத் தலைமையகத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு கடற்படைத் தளபதி கருணாகொட எங்களைச் சந்தித்தார்.

(நிறைவு)

---

இந்த வாரச் சொல்

# கோறை

கோறை என்கிற சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறான அர்த்தங்கள் வெளிப்படுமாறு பயன்படுத்தப் படுகிறது. ஒரு பொருள் அல்லது மனிதன் வெளித்தோற்றத்தில் நல்லதாகத் தெரிந்தபோதிலும் அதன் உள்ளே பழுதாகியிருப்பதையும் ஆரோக்கியமற்றிருப்பதையும் இந்தச் சொல் சுட்டுகிறது.

"அந்த மரம் வெளியில் பார்க்க நல்லாத் தெரிந்தாலும் உள்ளே கோறையாப் போச்சுது:'

"மரக்கொப்புகளைக் கண்டபடி வெட்டினால் வெட்டுவாய்க்குள்ள தண்ணி போய் மரத்தைக் கோறையாக்கிப் போடும்"

" கடுமையாக் குடிச்சுக் குடிச்சு அவன்ர உடம்பு கோறையாப் போச்சுது"

"அவவின்ர கதை வெண்ட கதையே தவிர அவவிட்ட சொத்துக்கள் எதுவும் இல்லாமல் கோறையாய்ப் போனதை ஆரறிவார்?"

"அந்த மரத்துக்குள்ள இருந்த கோறைக்குள்ள இருந்து நிறையத் தேன் எடுத்தவங்கள்"

"சுண்ணாம்புக் கல்லுக்குள்ள பெரிய கோறைகள் இருக்கும்"



04

அருண்பாக்யா

# மிக நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாதியம்

## உடையார்கள் உருவான விதம்

மன்னராட்சிக் காலத்தின் பின்னர் சொத்துகள் அதிகம் உடையோராக உருவெடுத்தவர்களே உடையார் சமூகத்தினர். வேளாளர்களான இவர்கள் பெரும் நிலவுடமையாளர்களாக மாறியமைக்குக் காரணம், யாழ்ப்பாண மன்னராட்சியின் வீழ்ச்சியாகும். உடையார்கள் என்று கூறப்படுவோரின் பராமரிப்பில் இருந்த மன்னனுக்குச் சொந்தமான காணிகள், கோவில் காணிகள் எனப் பலவும் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் உடையார்களின் சொத்துக்களாக மாறின.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் (18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக்குட்பட்ட குடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக (வன்னியின் ஒரு பகுதியும் இதில் உள்ளடங்கியது) சட்டங்களை எழுத்து மூலமாகத் தொகுக்கும் பொறுப்பு அப்போது யாழ்ப்பாணத்தில் திசாவைப் பதவி வகித்த கிளாஸ் ஈசாக் என்பவரால் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாண முதலிகள் பன்னிருவரைக் கொண்டு தேச வழமைச் சட்டத்தை இவரே தொகுத்தார். 1707 ஆம் ஆண்டு தேசவழமைச் சட்டத்தை யாழ்ப்பாணத்துக்கான சட்டமாக ஒல்லாந்து அரசு ஏற்றுக்கொண்டது.



இந்தச் சட்டத்தைத் தொகுத்த 12 முதலிமாரும் வேளாளர்களாக இருந்தமையால் தமக்குச் சார்பாக இந்தச் சட்டங்களைத்

தொகுத்தனர் என்று அறிய முடிகிறது. யாழ்ப்பாண மன்னர்களின் சொத்துகள், நில புலங்கள், கோவில் சொத்துகள், மன்னர்கள் அறவிட்ட வரிமுறைகள், அப்போதிருந்த நிர்வாக நடைமுறைகள் ஆகிய பல விடயங்கள் இந்தத் தேசவழமைச் சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

**விதானைமார், உடையார், மணியகார் போன்ற இந்த மேல்தட்டு வேளாளர்கள் சட்டபூர்வமற்ற வகையில் காணி உறுதிகளைத் தமதாக்கி எழுதுவதிலும் வல்லவர்களாக இருந்தார்கள்.**

விதானைமார், உடையார்கள், மணியகாரர் ஆகிய பதவி நிலைகளில் இருந்தவர்கள் ஏற்கனவே தமதாக்கிக் கொண்ட சொத்துக்கள் பற்றிய விவரம் ஒல்லாந்தருக்குத் தெரியவந்தால் அவை பறிக்கப் படவும் தாம் தண்டிக்கப்படவும் வாய்ப்புண்டு என்பதால் ஒல்லாந்தருக்குத் தெரியாமல் அவற்றைத் தந்திரமாகத் தவிர்த்துக் கொண்டனர். இதுபற்றி ஒல்லாந்து நிர்வாகத்துக்குத் தகவல்கொடுக்கும் வல்லமை சாதாரண மக்களுக்கு இருக்கவில்லை. சாதாரண மக்களின் பிரச்சினைகளை விதானைமார், உடையார்கள், முதலிமார், மணியகாரர் ஆகியோர் தம்மளவிலேயே தீரத்துக்கொண்டார்கள்.

தேசவழமைச் சட்டத்தின் சாராம் சமானது மேட்டுக்குடி வேளாளரின் கையில் காணி உரிமங்கள் இருக்கத்தக்கபடி பார்த்துக்கொள்வதாகவே இருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் வரி அறவிடும் பணியைச் செய்தவர்கள் உடையார் கட்டளை என அழைக்கப்பட்டனர் (தற்போது வன்னிப் பகுதியில் இது மருவி கத்தலை என அழைக்கப்படுகின்றனர்). உடையார்கள் என்று அழைக்கப்படுவோர் வரி அறவீடுவோராகக் கடமையாற்றி மக்களிடம் அறவிடும் வரியில் அனைத்தையும் ஒல்லாந்தருக்குச் செலுத்தாமல் அதில் ஒரு பகுதியைத் தமதாக்கிக் கொண்டனர். வரி செலுத்தாதவர்களிடம் அவர்களது காணியைத் தண்டமாகப் பெற்றதும் நடந்தன. சாதாரண விவசாயி ஒருவரிடமிருந்து அவர் வண்டிலில் ஏற்றிச் செல்லும் விளைபொருள்களில் இரண்டு மூடைகளையாவது தமக்கெனப் பறித்தெடுக்கும் நடைமுறையும் அப்போதிருந்தது. இதனால் உடையார்கள் சொத்துடைய சமூகமாகத் தம்மை உருவாக்கிக் கொண்டார்கள்.




விதானைமார், உடையார், மணியகார் போன்ற இந்த மேல்தட்டு வேளாளர்கள் சட்டபூர்வமற்ற வகையில் காணி உறுதிகளைத் தமதாக்கி எழுதுவதிலும் வல்லவர்களாக இருந்தார்கள். அரச காணிகளைத் தமது காணிகளாக எழுதுவதற்காக "ஜப்பான் உறுதி" என்ற கள்ள உறுதி எழுதும் நடைமுறை இந்தச் சமூகத்தவர்களிடம் 1980கள் வரை இருந்துள்ளது.

உடையார்களின் சொத்துகள் பற்றிச் சாதாரண மக்கள் பேசிக் கொள்ளும்போது, "கள்ள உறுதி எழுதி அம்பாளிச்ச காணியள் தானே... உதுகள்" என்று கூறுவதுண்டு. இந்த மூன்று மேல்தட்டு பதவி நிலைகளில் இருந்த வேளாளர்கள் பிழையான வழியில் சொத்துக்களை சேர்ந்தவர்கள். அதனாலோ என்னவோ இவர்களில் பலர் அழிந்து சிலர் கூலி வேலை செய்யும் நிலைக்குத் தற்போது வந்துள்ளனர். இவர்களின் பெரிய வீடுகள் பல இடிந்துவிழும் நிலையிலும் பற்றைகள் வளர்ந்து காடாகப் போய்ப் பாழடைந்த வீடுகளாகவும் கிடக்கின்றன. இவர்கள் எப்படி வேகமாகச் சொத்துச் சேர்த்தார்களோ அவ்வாறே எல்லாமே வேகமாக அழிந்துபோகின்றன என்று கூறப்படுவதுண்டு.

(தொடரும்)

புத்தக அத்தியாயம்




# 02

# மகாவம்சம் கூறுவது என்ன...?

மகாவம்சம் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு வரலாற்று நூலாகக் கொள்ளப்படுகிறது. கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாநாமர் என்கிற பிக்குவால் பாளிமொழியில் எழுதப்பட்டது. இது கி.மு 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான பத்து நூற்றாண்டுகால வரலாறு பற்றிக் குறிப்பிடுகிறது. ஐ.நாவின் யுனெஸ்கோ இவ்வாண்டு வெளியிட்ட அறிக்கையில் பழமையான ஆவணமாக இந்த நூலை ஏற்றிருக்கிறது. அந்த மகாவம்சம் என்ற நூலில் என்னவெல்லாம் கூறப்பட்டிருக்கிறது என்பதைச் செம்மண் வாசகர்களுக்கு இந்தப் பகுதியில் வாசிக்கத் தருகிறோம்.

சுமணகூட (ஆடம்ஸ்பீக்) பர்வதத்தைச் சேர்ந்த தேவகுமாரன் மாக சுமணன் ஞான மார்க்கத்தைப் பின்பற்றியதுடன் வணங்கத்தக்க அவரை வணங்குவதற்கு ஏதேனும் தரும்படி கேட்டான்.

ஜீவர்களுக்கு நல்லதையே தரும் அவ்வள்ளல் தமது கருநீல நிறமுள்ள சிகையைக் கைநிறைய எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அதை அற்புதமான தங்கக் கலசத்தில் பெற்றுக்கொண்ட சுமணன் குருநாதர் அமர்ந்திருந்த இடத்தில் ஏழு முழ உயரம் நவரத்தினங்களைக் குவித்து அதன் மீPது சிகையை வைத்து, அதன் மீது ஸ்தூபம் எழுப்பி அதை வணங்கி வந்தான்.

சம்புத்தர் நிர்வாண மோட்சம் அடைந்த பிறகு சாரிபுத்ர தேரருடைய சீடரான சரபு தேரர் தமது இரித்தி சக்தியினால் எரிந்து கொண்டிருக்கும் சிதையிலிருந்து புத்தருடைய காறை எழும்பைப் பெற்று இங்கே (இலங்கைக்கு) கொண்டுவந்தார். பிக்குகள் சுற்றிலும் சூழ்ந்திருக்க அவர் அங்கே அதே சேதியத்தில் (ஸ்தூபம் - சைத்தியம்) வைத்துப் பொன்னிறக் கற்களால் மூடி, அந்தச் சித்தி செய்யும் புருஷர் ஸ்தூபத்தைப் பனிரெண்டு முழ உயரமுள்ளதாக அமைத்து அங்கிருந்து போய்விட்டார்.

மன்னன் தேவநம்பிரிய திஸ்ஸனுடைய தம்பி மகனான உத்த சூளாபயன் அதிசயமான இந்தச் சேதியத்தைப் பார்த்து அதை முப்பது முழ உயரமுடையதாகக் கட்டினான்.

துட்டகாமினி மன்னன் தமிழர்களுடன் போரிட்டபோது, இந்த இடத்தில் தங்கியிருக்க நேரிட்டது. அப்போது இந்தச் சேதியத்தை எண்பது முழ உயரமுள்ளதாகக் கட்டினான்.

இந்தவிதமாக மகியங்கனைத் தூபம் பூர்த்தி ஆயிற்று.

இவ்விதமாக மனிதர்கள் வசிக்க ஏற்ற இடமாக நமது தீவைச்



செய்தபிறகு அம் மகாவீரர் உருவெல வனத்துக்குத் திரும்பிச் சென்றார்.

**மகியங்கான விஜயம் இங்கே முடிகிறது**

இரக்கமே உருவான பகவன் உலகம் முழுவதும் புனித மடைந்ததில் மனமகிழ்ந்து, ஞானமடைந்த ஐந்தாவது ஆண்டில் ஜேதவனத்தில் (கோசல நாட்டில் சாவதிக்கு அருகிலுள்ள வனம்) வசித்துக்கொண்டிருந்தபோது, ரத்தின சிம்மாசனத்துக்காக ஒரு யுத்தம் ஏற்படப்போகிறது என்பதைக் கண்டார்.

நாகர்களான மகோதரனும், குலாதரனும் மாமன் மருமகனாவர். இவர்களுக்கிடையே போர் மூண்டது.

சம்புத்தர், சைத்ர மாதம் கிருஷ்ண பட்சத்தில் உபோசத தினத்தன்று (பௌத்தர்களுக்குப் புனிதமான தினம். இது மாதத்தில் நான்கு முறை வரும். அமாவாசை, பௌர்ணமி, அமாவாசை கழிந்த எட்டாவது நாள், பௌர்ணமி கழிந்த எட்டாவது நாள் ஆகியவை இவை) அதிகாலையில் புனிதமான பிட்சா பாத்திரத்தையும் ஆடையையும் எடுத்துக்கொண்டு நாகர்களிடம் இரக்கம் கொண்டவராக நாகத்வீபத்தை (இலங்கையின் வடமேற்குப் பகுதி) அடைந்தார்.

மகோதர நாகன் அப்போது அரசனாக இருந்தான். அதீத சக்திகள் அவனிடம் இருந்தன. நாகநாடு கடலில் ஐநூறு யோசனைக்குப் பரந்து இருந்தது.

கண்ணவர்த்தமான பர்வதத்திலிருந்த நாக மன்னனுக்கு மகோதரனுடைய தங்கையை மணம் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அவளுடைய புத்திரன்தான் குலாதரன். அவனுடைய தாயாரின் தந்தை, அவன் தாய்க்கு அற்புதமான சிம்மாசனம் ஒன்றை அளித்திருந்தார்.

கண்ணவர்த்தமான நாகவர்மன் இறந்ததும் மாமனுக்கும் மருமகனுக்கும் இடையே இந்தச் சண்டை மூளும் போல் இருந்தது. மலைப் பகுதியிலிருந்த நாகர்களும் அற்புத சக்திகளால் பலம் பெற்றிருந்தனர்.

சமிதி சுமணன் என்ற தேவன் ஜேதவனத்தில் தன் இருப்பிடமாகக் கொண்டிருந்த ராஜாயதன விருட்சம் ஒன்றை எடுத்துக்கொண்டு, அதனைப் புத்தர் மீது வெயில்படாமல் குடைபோலப் பிடித்துக்கொண்டு அவருடைய அனுமதியுடன் முன்பு அவன் தங்கியிருந்த நாகத்வீபத்துக்கு வந்தான்.

அந்தத் தேவன் தன்னுடைய முன் ஜென்மத்தில் நாகத்வீபத்தில் மனிதனாக இருந்தான். இந்த ராஜாயதன விருட்சம் பின்னர் நிலைபெற்ற அந்த இடத்தில் பஸ்ஸிக

**அமாவாசை, பௌர்ணமி, அமாவாசை கழிந்த எட்டாவது நாள், அதிகாலையில் புனிதமான பிட்சா பாத்திரத்தையும் ஆடையையும் எடுத்துக்கொண்டு நாகர்களிடம் இரக்கம் கொண்டவராக நாகத்வீபத்தை அடைந்தார்.**

புத்தர்கள் (இவர்களும் நிர்வாணம் அடைந்தவர்கள். ஆனால் உபதேசகாரர்கள் அல்லாதவர்கள்) பலர் உணவு அருந்துவதை அவன் பார்த்தான். அதைக் கண்டதுமே மனம் மகிழ்ந்தவனாக அவர்கள் பிட்சா பாத்திரத்தைச் சுத்தப்படுத்த கிளைகளைக் கொடுத்தான். அதனால் மறு ஜென்மத்தில் ரம்மிய மிகு ஜேதவனத்தில் ராஜாயதன விருட்சத்தில் பிறவியெடுத்தான். அந்த மரம் கோட்டை வாயிலருகே இடம்பெற்றிருந்தது.

தேவ தேவரானவர் அந்தத் தேவனுடைய நலனைக் கருதியும் அதன் மூலம் நமது நாட்டுக்கு ஏற்படக்கூடிய நன்மையை உத்தேசித்தும், அவனை மரத்துடன் இங்கு (இலங்கைக்கு) அழைத்து வந்தார்.

போர்க்களத்துக்கு மேலாக வானவெளியில் சஞ்சரித்த வண்ணம் மன இருளை அகற்றும் மகனாகிய குருநாதர் நாகர்கள் மீது அடர்ந்த இருள் கவியச் செய்தார்.

பீதியினால் துயரமுற்றவர்களைத் தேற்றி மீண்டும் அங்கு ஒளி ஏற்படச் செய்தார். அருள் ஞானியைக் கண்டதும் அவர்கள் களிப்புடன் அவர்தம் பாதத்தைப் போற்றினர். பின்னர் அச்சம் தீர்க்கும் அண்ணல், அவர்களுக்குச் சமாதான நெறியைப் போதித்தார். போரிட்ட இரண்டு நாகர்களும் மகிழ்வுடன் ஒன்றுபட்டுத் தங்கள் சண்டைக்குக் காரணமாக இருந்த சிம்மாசனத்தைப் புத்தருக்கே அளித்தனர்.

புத்தர் கீழே இறங்கி அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். நாக மன்னர்கள் அளித்த அமுதன்ன உணவையும் பானத்தையும் அருந்தினார்.

(தொடரும்)



**கதிரேசன் காத்தவராயன்**

# எங்கை போகப் போறம்?

வாசிசாலையடிக்கு கனநாளாப் போகேல்லையெண்ட நினைப்பு வந்துது. வெளிக்கிட்டுப் போனன். என்ரை பேரன்ரை புண்ணியத்திலை பேப்பரிலை வர முந்தியே போனிலை பாத்திடுறதாலை பேப்பர் பாக்கிறதிலை அக்கறை குறைஞ்சு போச்சுதல்லே. என்ன அதிலை போயிருந்தால் நாலு பேர் வருவினம் கதைக்கலாம் எண்டிற நிலையும் குறைஞ்சல்லே போச்சுது? சும்மா போனன். நினைச்சது சரிதான். நான் மட்டுந்தான்.

என்ன செய்வமெண்டு யோசிச்சுக்கொண்டிருக்க கனகர் வந்தார். மற்றப்பக்கத்தாலை முருகேசரும் தம்பரும் வந்தினம். 'அடேய்..தம்பு? நீ...இஞ்சதான் இருக்கியோ? குண்டு கனகாலம்?' எண்டு கனகர் சத்தமாக் கேட்டார். 'எங்கையப்பா போக? மாறிமாறி ஒவ்வொரு வேலையள் அதுகளோடை பொழுதுகள் சரி' எண்டு ஒரு சலிப்போடை தம்பர் சொல்லி என்னையும் முருகேசரையும் பாத்தார்.

'உண்மைதான் தம்பு நாய்க்கு வேலையுமில்லை நடக்க நேரமுமில்லை' எண்டன் எல்லாரும் சிரிச்சினம். 'தம்பு அப்பிடியென்னப்பா வேலையெண்டு பெரிசாய்க் கிடக்கு...ஜனாதிபதியே ஊர்பாக்கத் திரியிறார்...உனக் கென்னப்பா அப்பிடி வேலை...அதுவும் பின்னேரங் களிலை?' எண்டுமுருகேசர் தம்பரைக் கிளறினார்.

'உங்களுக்கென்னப்பா சொல்லுவியள்... நான் படுகிற பாடு? பேரமக்களோடை படுகிற பாடு...' எண்டு நிப்பாட்டினார். 'அப்ப எங்களுக்கு பேரமக்கள் இல்லைஎண்டிறியோ?' எண்டு கேட்டார் கனகர். 'ஆரப்பா அப்பிடிச் சொன்னது? ஊருக்கை பிள்ளையள் இருக்கிறதாலை வந்த பிரச்சனை... ஒராளின்ரை பிள் ளையை ஏத்தினால் மற்றாளுக்கு மூஞ்சை நீண்டு போகுது பள்ளிக்கூட ஓட்டம் ரியூசன் ஓட்டம்...நாலை ஏத்தியிறக்கிறதிலை துலைஞ்சன்' எண்டு சலிப்பும் பெருமையும் கலந்து சொன்னார் தம்பர்.

'ஆதுக்குத்தானே ரண்டு நாள் லீவு கிடைச்சிருக் கல்லே?' எண்டன் நான். 'ரண்டு நாள் லீவோ? ம்ம்ம்... அது சும்மா பேப்பரிலைதான்... பேசனல் கிளா செண்டொரு கூத்தல்லே தொடங்கிவிட்டுது?' எண்டு சலிச்சார் தம்பர். 'அதுதான் அங்கை எங் கடையாக்களும் முந்தினதைவிட இப்ப கூடுதலா யல்லே ஓடுதுகள்...' எண்டார் கனகர்.

'நான் சொல்ல வெளிக்கிட நீமுந்தீட்டாய் கனகு... உதுதான் நடக்குது.. ஊரடங்குச் சட்டத்துக்கையேறோட் டிலை திரியிறஆக்களல்லே நாங்கள்... கட்டுப்படுவமோ? புதுப் புதுவழியள் கண்டு பிடிப்பமல்லே?' எண்டு சொல்லிச் சிரிச்சார் முருகேசர். 'ஓமோம்...திருடனாத் திருந்தினாச் சரியெண்டதுதானே நிலைமை சட்டத் தாலை உதுகளைச் செய்யேலுமோ?' எண்டன் நான்.

'உதுதான்... ஐயா சட்டத்தைப்பற்றியோ அதை நடைமுறைப்படுத்துறது ஆரெண்டோ ஒருவிதமான அறிவுமில்லாமல்தான் அறிவிச்சவரெண்டல்லே கதைக்கினம்... அதுக்குள்ளை நடைமுறையொழுங்குக ளைச் சரியாத் தெரியாத ஆக்கள்தானாம் ஆலோசனை யெண்டும் ஒரு கதை...உண்மைபொய் அவனுக்குத்தான் தெரியும்?' எண்டு அங்காலையும் இஞ்சாலையும் பாத்தபடி முருகேசர் சொன்னார்.

'நானும் உப்பிடித்தான் கேள்விப்பட்டனான்... சட்டத் திலை இடமில்லையாம்... அதோடை பெற்றாருக்கும் பெரிசாய் உடன்பாடு குறைவாம்... அவைக்கு பிள்ளை மற்றவையைவிட கூடுதலான மாக்ஸை தன்ரை பிள்ளை எடுத்தால் சரி எண்டிறதிலைதானே கவனம் முழுதும் இருக்கே தவிர வேறைபக்க யோசினையள் இல்லைத்தானே?' எண்டன் நான். ஆமோதிச்சினம். 'அதோடை உந்த வாத்திமாரும் பெற்றாருக்கு கனக்க விதமான ஆலோசனை சொல்லியிருக்கினம் எண்டும் அறிஞ்சன்.. அதின்ரை காரணத்தாலைதான் இப்ப குறூப் கிளாஸ் எண்டதிலை ஆள்ச்சேத்து பெற்றாரே வீடுகளிலை வகுப்புகளுக்கான ஒழுங்குகளைப் பாக்கி னமாம்?' எண்டார் முருகேசர்.

'உந்தக் கதை நானும் கேள்விப்பட்டதுதான்... வெள் ளியிலையும் ஞாயிறிலையும் ரண்டு நாள் பிள்ளை விளையாட்டு ரீவி போன் எண்டு பழக்கப்பட்டுதெண்டால் படிக்கிற மனநிலை குழம்பிவிடும் எண்டு ஒருகதையும் உலாவுதல்லே?' எண்டார் கனகர். 'அதுகுஞ் சரிதான்...

அந்த ரண்டு நாளையும் பிள்ளையளுக்கு என்னென்ன செய்யலாமெண்டிற யோசினையளும் இல்லைத்தானே?' எண்டன் நான்.

'உண்மை அதுதான் கதிரே சண்ணை மாற்றுவழியொண்டும் சொல்லேல்லையல்லே?' எண்டார் கனகர் உற்சாகமாய். 'இஞ்சார் வழியளைக் கண்டு பிடிக்கிறதிலை எங்களுக்கில்லாத திறமையோ? நூங்கள் ஆரன் யோசிப்பினமெண்டு நினைக்கிற வரைக்கும் கதைக்கிறதுக்கு பஞ்சமிருக்காது' எண்டு கொண்டு எழும்பி வந்திட்டன்.

---

21

# மீட்டல்...

துன்பானந்த சுவாமி



விடுகிறது. உணவு நச்சுத்தன்மையை இயல்பாக அடைந்துகொள்கிறது. இவ்வாறான நெகிழக்குவளையில் சூடான பானங்களை இட்டருந்தும்போது இருபது வெண்சுருட்டுப் புகைப்ப தாலேற்படுகிற பாதிப்புக்களுக்கு நிகரான தாக்கம் ஏற்படுவதாக ஆய்வுகள் பல கூறுகின்றன என்பது இவ்விடத்தில் குறிப்படத்தக்கது.

இத்தகைய மென்நெகிழித் தாள்கள் தட்டுக்களுக்குமேல் இடப்படுவது ஒருபுறமிருக்க அத்தாள்களாலேயே உணவுப்பண்டங்கள் பொதியிடவும்படுகின்றன. தட்டில் உண்ணும்போது மிகக் குறைந்தளவு நேரமே உணவுடனான தொடுகை இருக்கிறது. ஆனால் பொதியிடலின்போது மணிக்கணக்கில் சிலசமயங்களில் நாட்கணக்கிலும் உணவுடன் தொடுகையிலிருக்கிறது. எனவே சேரக்கூடிய வேண்டத்தகாத ஆபத்தை உண்டு பண்ணும் பதார்த்தங்கள் மிக அதிகளவான செறிவில் உணவுடன் சேரவாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

விருந்து பரிமாறல் என்பதே ஒரு தனிப்பண்பாடுதான். வாழையிலையில் ஒரு ஒழுங்கில் உறவுகளால் பரிமாறப்படுகிற கறிகளையும் சுடச்சுட சோற்றையிடும் போதெழுகிற வாழையிலை வெந்தெழும் நறுமணத்தையும் தாராளமாகக் குழைத்து சுவைக்கும் சுகத்தையும் எமது தலைமுறை தொலைத்துள்ளது. வாழையிலையில் ஓடும் பாயாசத்தை மறித்து பக்குவமாக அள்ளி வாயிலிடும் அலாதியான சுகத்தையும் இழந்தாயிற்று. இழந்துபோன இந்த சுகங்களைப் பற்றியும் அதனோடிணைந்த ஆரோக்கியத்தையும் பற்றிப் பேச நிறையவே உள்ளன.

மென்நெகிழித்தாளில் உணவுப் பண்டங்களைப் பரிமாறும்போது இத்தாளானது தன்னுள் அடையும் வெப்பத்தாலான இரசாயன மாற்றங்களை உணவினுள் கக்கி


இப்போது வழையிலைக்கு வருவோம். வாழையிலையில் சூடாக பரிமாறுகையில் வாழையிலையானது அச்சூட்டில் வெந்து தன்னிடமிருக்கிற இயற்கையான உடலிற்குத்தேவையான பல பதார்த்தங்களை உணவுடன் சேர்க்கிறது. இப்பதார்த்தங்களின் ஒரு தொகுதி உண்டாக்கும் வாசனையானது பசியைத் தூண்டுவதுடன் சமிபாட்டிற்கான தயார்ப்படுத்துதலைச் செய்ய சமிபாட்டுத் தொகுதியை ஊக்குகிறது. அருந்தும்போது ஒருவிதமான சுவையை ஏற்படடுத்துகிறது. இதனால் உணவை விருப்போடு உண்ணும் ஊக்கத்தை நாம் பெறுகிறோம். இன்று அப்படியான வாய்ப்புகள் அருகிவிட்டன. இல்லையென்றே சொல்லவும் முடியும்.

அவ்வாறேதான் சோற்றை பனையோலைப் பாயில் கொட்டி ஆறவிடும்போதும் பனையோலை நறுமணத்துடன் ஆரோக்கியமான சில பதார்த்தங்களையும் சோற்றிற்கு வழங்குகிறது. அதுவும் இப்போது இல்லையென்றாகிவிட்ட ஒன்று. கிடாரம் பித்தளையாயிருந்தது மாறி அலுமினிய அண்டாவாகிவிட்டது. அலுமியம் சூடாகி தீங்கான வேதிப்பொருட்களை உணவுடன் சேர்ப்பதை உணரத்தவறுகிறோம். பித்தளை அப்படியல்ல. அதனால்தான் பித்தளையாலான சமையல் பாத்திரங்களை சூடாகப் பரிமாற எம் முன்னோர் அதிகம் பயன்படுத்தினர். சூடானபானங்களைப் பருக பித்தளையாலான குவளைகளை குறிப்பாக மூக்குப் பேணியைப் பாவித்தனர். மூக்குப்பேணி என்றால் என்ன என்றுமட்டும் கேட்டுவிட வேண்டாம்.

இன்று அவசர உலகம் அறிவியல்ரீதியாக முன்னேறிய உலகம் என்றெல்லாம் பெருமைப்படுவதில் அர்த்தம் ஏதும் உண்டா? அன்றைய காலத்தவரை முன்னேறாதவர்கள் என்று கேலிபேசும் ஒவ்வொரு தடவையும் நாம் அவர்களை விமர்சிப்பதற்கான தகுதி நிலையில் இருந்துகொண்டுதான் செய்கிறோமா? என்கிற கேள்வியை எழுப்ப வேண்டும்.


உணவு தயாரித்தல் என்பதற்கான முன்னாயத்தம்பற்றி ஏற்கனவே பேசியிருக்கிறோம். அது ஒரு கூட்டு முயற்சியாக இருந்த நிலை இன்றில்லை. அதுபோலவே உபசரித்தல் என்பதும் அனேகமாக இல்லையெனுமளவில் வந்து நிற்கிறது. சாப்பிடவாருங்கள் என்றழைக்க முன்பே வரிசையில் இடிபடுகிற நிலையாகிவிட்டது. மறுபுறம் வாருங்கள் என்றழைக்க ஆளில்லாதநிலையும் உள்ளது. அழைப்பாளர்கள் ஒளிப்படப்பிடிப்பில் படப்பிடிப்பாளரின் எடுபிடிகளாக நடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை இன்று இயல்பாகக் காணமுடியும். வரவேற்பது எப்படி?

சபையிருத்துவது எப்படி? கையில் உணவுப்பொருளை ஏந்தி குனிந்து சபைக்குப் பரிமாற எத்தனைபேரால் இயலும்? அதேபோல சப்பணங்கொட்டி அமர்ந்து உணவருந்த எத்தனை பெரால் இயலும்? துரையில் அமரமுடியாததால் மேசை வந்ததா? மேசை வந்ததால் தரையிலமர்வது இல்லாமலாகியதா? என்றேதும் பட்டிமன்றமே நடாத்தலாம் என்கிற அளவில் நிற்கிறோம். தரையிலமர்ந்த (சப்பணமிட்டு) உண்பதில் உடலியல் ரீதியாக இருக்கிற நன்மைகள் பல. வயிறு நிறைவதை இலகுவாக உணர முடியும் என்பதற்கப்பால் எமது உடலினது சமிபாட்டுத்தொகுதி தன்னை அதிகமதிகம் தன்னைத் தயார்நிலைக்குக் கொண்டவந்து உடலால் உணவுக்கூறுகளை அகத்துறுஞ்சும் செயல் சிறப்படைகிறது. இப்படியே பேசிக் கொண்டேபோகலாம். பேசுவோம்.




# "ஓப்பன்ஹைமர்"

## நல்லதொரு வரலாற்று ஆவணம்




உலக வரலாற்றில் மனிதனுக்கு மனிதனே ஏற்படுத்திய பேரழிவுகளை வரிசைப்படுத்தினால் அதில் ஜப்பானின் ஹிரோஷிமா - நாகசாகி ஆகிய நகரங்கள் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசிய சம்பவம் முன்னிலை வகிக்கும். கிட்டத்தட்ட 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் உயிர்களைக் குடித்த அந்தக் கொடூரம் மனிதகுலத்துக்கு மாபெரும் தலைகுனிவை ஏற்படுத்திய துர்நிகழ்வுகளில் ஒன்று. உலக நாடுகளின் வரலாற்றையே மாற்றி எழுதிய இந்தச் சம்பவத்துக்குக் காரணமாக இருந்த அணுகுண்டை உருவாக்கிய ரொபேர்ட் ஜே.ஒப்பன்ஹைய்மரின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு இயக்குநர் கிறிஸ்தோபர் நோலன் உருவாக்கியுள்ள வரலாற்று ஆவணம்தான் இந்த 'ஒப்பன் ஹைய்மர்' திரைப்படம்.

**கதை**

ஒப்பன்ஹைமர் (சிலியன் மர்ஃபி) ரஷ்ய கம்யூனிஸ்ட்களுக்கு



உதவினாரா என்ற விசாரணையின் பின்னணியில்தான் முழுக் கதையும் சொல்லப்படுகிறது. 1920களில் இங்கிலாந்து மற்றும் ஜேர்மனியில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் தனது மேற்படிப்பைத் தொடரும் இளம் வயது ஒப்பன்ஹைமர் நமக்குக் காட்டப்படுகிறார். தொடர்ந்து கம்யூனிஸ்ட்களுடனான அவரது நட்பு, ஜீன் டேட்லாக் (ஃப்ளோரன்ஸ் பக்) உடனாக காதல், ஹிட்லரின் நாசிப் படையினருக்கு எதிரான போரில் ஒப்பன்ஹைமரின் பங்கு எனக் காட்சிகள் நகர்கின்றன.





சொந்த நாடு திரும்பும் அவர், அமெரிக்க அரசின் 'புராஜெக்ட் மன்ஹாட்டான்' என்ற ஒரு திட்டத்துக்குள் கொண்டு வரப்படுகிறார். இந்தத் திட்டத்தின் நோக்கம் என்ன? அதன் முடிவு என்னவாக இருக்கும் என்பது குறித்த எந்தத் தெளிவும் அவருக்கு இல்லை. அந்தத் திட்டத்துக்காக அமெரிக்காவின் லொஸ் அலமாஸ் என்ற செவ்விந்தியர்களுக்கு சொந்தமான இடத்தில் ஒரு தனி நகரமே உருவாக்கப்படுகிறது. அங்குதான் உலகையே புரட்டிப் போடும் அந்தக் கண்டுபிடிப்பைத் தனது சகாக்களுடன் நிகழ்த்துகிறார். சுயநலம் கொண்ட ஒரு மனிதனின் தன்முனைப்பால் பொய்க் குற்றச்சாட்டுக்கு ஆளாகிக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுகிறார். தன் மீதான முறைப்பாடுகளை ஒப்பன்ஹைமர் உதறித் தள்ளினாரா என்பதை ஒரு சிறிய திருப்பத்துடனும் நிறைய வசனங்களுடன் சொல்லியிருக்கிறார் நோலன்.

படத்தின் இரண்டாம் பாதியின் பிற்பகுதியில் ஒரு காட்சி. ஹிரோஷிமா - நாகசாகி சம்பவத்துக்குப் பிறகு அமெரிக்காவின் அப்போதைய அதிபராக இருந்த ஹாரி ட்ரூமேன், ஒப்பன்ஹைமரை நேரில் பாராட்ட அழைக்கிறார். வெள்ளை மாளிகைக்குச் செல்லும் ஒப்பன்ஹைமர் அதிபரின் முகத்துக்கு நேரே, 'மிஸ்டர் ப்ரெசிடென்ட், என் கைகளில் ரத்தக் கறை படிந்திருப்பதைப் போல உணர்கிறேன்' என்று சொல்கிறார். இதுதான் 'ஒப்பன்ஹைமர்' படத்தின் அடிநாதம். இது வெறுமனே அணுகுண்டு வெடிப்பை 70அடித் திரையில் பிரம்மாண்டமாக காட்டும் ஒரு திரைப்படமல்ல. அரசியல் சுழலில் அலைகழிக்கப்பட்டு குற்ற உணர்ச்சியில் தவிக்கும் ஒரு சூழ்நிலைக் கைதியின் கதை. நாயகனாகக் கொண்டாடப்பட்ட ஒருவன், தனி மனிதனின் தன்முனைப்பால் கீழிறக்கப்படும் கதை.

**பாத்திரங்கள்**

ஒப்பன்ஹைமராக வாழ்ந்திருக்கும் சிலியன் மர்ஃபிக்கு இது வாழ்நாளுக்கான படம். இது வரை வந்த நோலன் படங்களில் எந்தவொரு நடிகரும் (சிலியன் மர்ஃபி உட்பட) வழங்காத ஓர் அற்புதமான நடிப்பை இதில் வழங்கியுள்ளார். சிறந்த நடிகருக்கான ஒஸ்கர் கிடைத்தாலும் ஆச்சரியம் இல்லை. அடுத்தபடியாக லெவிஸ் ஸ்ட்ராஸ் ஆக நடித்திருக்கும் ராபர்ட் டவுனி ஜூனியர். அயர்ன்மேனாக உலகம் முழுவதும் ரசிகர்களைக் கவர்ந்தவர், அதன் பின் சொல்லிக் கொள்ளும்படியாக எதிலும் ஈர்க்கவில்லை. அந்த





குறையை 'ஓப்பன்ஹைமர்' தீர்த்து வைத்திருக்கிறது. மேட் டேமன், ஃப்ளோரென்ஸ் பக், எமிலி ப்ளண்ட், ஜோஷ் ஹார்ட்நெட்ம் கேஸி அஃப்ளிக், கேரி ஓல்ட்மேன் என அனைவரும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். சில காட்சிகளில் வந்தாலும் ரெமி மலெக் கதாபாத்திரம் மனதில் நிற்கிறது.

ஓப்பன்ஹைமரின் கற்பனையில் ஓடும் குவான்டம் இயற்பியலில் அதிர்வலைகள், ஒவ்வொரு ுறை ஓப்பன்ஹைமர் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகும்போது பின்னணியில் ஏற்படும் அணுகுண்டின் கதிர்வீச்சு, அவர் தடுமாறும்போது சுற்றி இருப்பவை அதிர்வது, நான் லீனியர் முறை கதை சொல்லல் என ஆங்காங்கே நோலனின் தொனி தெரிந்தாலும், இது வழக்கமான நோலன் படங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு படம். இன்னும் சொல்லவேண்டுமென்றால் இந்தப் படம் நோலன் ரசிகர்களுக்கே பிடிக்குமா என்பதே சந்தேகமே. நோலன் படங்களில் வழக்கமாக இடம்பெறும் மூளைக்கு வேலை கொடுக்கும் திரைக்கதையோ, திடீர்த் திருப்பங்களோ, புல்லரிக்கச் செய்யும் பின்னணி இசையோ இதில் இருக்காது. அப்படி வைப்பதற்கான இடமிருந்து, அவை வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டிருக்கின்றன. அறிவியலைத் தாண்டி அரசியலையும், மனித உணர்வுகளையும் இந்தப்படம் அதிகம் பேசுகிறது. இதுவரை நோலன் இயக்கிய படங்கள் எதுவும் இந்த அளவுக்கு துணிச்சலுடன் அரசியலை பேசியதில்லை.

**பலம் - பலவீனம்**

படத்தின் மிகப் பெரிய பிரச்சினை நீ....ண்ட நெடிய வசனங்கள் தான். பொழுதுபோக்கு அம்சங்களுக்காக படம் பார்க்க வரும் சராசரி ரசிகனை இப்படம் திருப்திபடுத்துவது கடினம். ரொபர்ட் ஓப்பன்ஹைமரின் பின்னணி குறித்து கொஞ்சமேனும் தெரிந்துகொண்டு படம் பார்க்கச் செல்வது நலம். 3 மணி நேரங்களுக்கு மேலாக ஓடக் கூடிய படத்தில் ஏராளமான நெடிய காட்சிகள் கொஞ்சம் அல்ல, பொறுமையைப் பலருக்கும் சோதிக்கலாம். அதேபோல படத்தின் தொடக்கத்தில் வரும் ஆழமான அறிவியல் வசனங்களையும், ஏராளமான கதாபாத்திரங்களையும் புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுவதை தவிர்க்க இயலாது.


எந்தவித சிக்கல்களும் இல்லாத திரைக்கதையைக் கொண்ட 'படத்தில் வசனங்களையும், கதாபாத்திரங்களையும் பின்தொடர்வதே சற்றே கடினமாக இருக்கிறது.

'இப்போது நான் உலகத்தை அழிக்கும் மரணமாக ஆகிவிட்டேன்' என்ற கீதையின் மேற்கோள், ஐன்ஸ்டீனுக்கும் ஓப்பன்ஹைமருக்கும் இடையிலான நட்பு, அதனை படத்தில் காட்டிய விதம் சிறப்பு. லுட்விக் கோரன்ஸனின் பின்னணி இசை படத்துக்கும் பெரும் பலம். படப்பிடிப்பு தொடங்கியது முதலே பெரும் பில்டப் கொடுக்கப்பட்ட அந்த ஹிரோஷிமா அணுகுண்டு வெடிப்பு காட்சிக்கான முக்கியத்துவத்தை குறைத்தது ரசிகர்களுக்கு ஏமாற்றத்தைத் தரலாம். காரணம், படத்தின் ஆரம்பம் முதலே அதை நோக்கித்தான் காட்சிகள் நகர்கின்றன. அந்தக் காட்சியை எதிர்பார்த்து எதிர்பார்த்து கடைசியில் படமே முடிந்து விடுகிறது. எனினும், அணுகுண்டு சோதனையை காட்சியப்படுத்திய விதம் பிரமாண்டம்.

மனிதகுலத்தின் கரங்களில் இன்று வரை படிந்திருக்கும் ரத்தக் கறைக்கு காரணமான ஒரு பேரழிவின் சாட்சியாய் இந்தப்படம் இன்னும் 100 ஆண்டுகளுக்கு ஒரு வரலாற்று ஆவணமாக நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.





**கதை**

பிரபல பாடகரும், மொடலுமான லைலா (மீனாக்ஷி சவுத்ரி) அடுக்கு மாடிக் குடியிருப்பில் கொல்லப்பட்டு கிறார். காவல் துறையில் புதிதாகச் சேர்ந்த சந்தியாவிடம் (ரித்திகா சிங்) இந்த வழக்கு ஒப்படைக்கப்படுகிறது. சிக்கல் நிறைந்த வழக்கு என்பதால் விசாரணையில் தடுமாறும் சந்தியா தனது குருநாதரும், முன்னாள் புல னாய்வு அதிகாரியுமான விநாயக்கின் (விஜய் ஆண்டனி) உதவியை நாடு கிறார். ஆரம்பத்தில் மறுக்கும் அவர் பின்பு ஒப்புகொண்டு குற்றவாளியைத் துப்பறி கிறார். மொடல் லைலாவை கொன்றது யார்? கொலைக்குப் பின்னால் இருக்கும் காரணம் என்ன? - என்பதே மீதிக் கதை.

அட்டகாசமான காட்சி அமைப்புகளால் ஹொலிவூட் தரத்தில் படத்தை கொடுக்க முயன்றிருக்கிறார் இயக்கு நர் பாலாஜி கே குமார். அவரது எண்ணத்துக்கு தனது கமரா லென்ஸ் வழியே உயிர் கொடுத்திருக்கிறார் சிவ குமார் விஜயன். காட்சித் தொகுப்பு, ஒளியமைப்பு, கமரா கோணங்கள் என ஒளிப்பதிவு ஒருபுறமும் அதற் கேற்ற ஆர்.கே.செல்வாவின் படத்தொகுப்பு மறுபுறமும், இடையில் வரும் கிராபிக்ஸ் காட்சிகளும், கலை ஆக்கமும் படத்தின் தரத்தைக் கூட்டுகின்றன. கிரிஷ் கோபாலகிருஷ்ணனின் பின்னணி இசை கவனம் பெற்ற அளவில் பாடல்கள் பெரிதாக ஈர்க்கவில்லை. இப்படி யான தொழில்நுட்ப குழுவின் பலத்துடன் கொலையான பெண்ணின் குர லின் வழியே தொடங்குகிறது கதை.

இதுபோன்ற கதைகளில் இருக்கும் சுவாரஸ்யமே அதன் திரைக்கதையைச் சுற்றி போடப் படும் இறுக்கமான முடிச்சுகளும், படம் நகரும்போது அதன் பிடி கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்வதும் தான். அப்படியாக போடப்பட்ட முடிச்சுகள் ஆரம்பத்தில் வலுவாக இருந்தாலும், துப்பறியும் தருணங்களின் அதன் இறுக்கம் தளர்ந்து சுவாரஸ்ய மற்றிருப்பது படத்தின் பெரும் சிக் கல்.

தொடக்கத்தில் இந்த வழக்கு விசாரணையை துப்ப றிய மறுக்கும் விஜய் ஆண்டனி பின்பு ஒப்புகொள்வ தற்கான காரணமே ஏற்றுகொள் ளும்படியாக இல்லை. மேலும், அவருக்கான பின்கதை படத்துக்கு எந்த வகையிலும் உறுதுணையாக இல்லை. அப்படியிருக்கும் போது அதற்காக எழுதப்பட்ட காட்சிகள் நேரத்தை வீண்டித்து இழுக்கின்றன. ஒரு கதாபாத்திரத்தை அதற்குரிய நடிப்பில்லாமல் பெயர ளவில் மட்டும் ஸ்பெஷல் சைல்டு என குறிப்பிடுவது, சீனர்களின் முக அமைப்பை கொண்ட ஒருவரை பணிப்பெண் எனக் கூறித் தமிழ் பேச வைத்திருப்பது, கதை நிகழும் இடம் குறித்து தெளிவில்லாமல் மாறிக் கொண்டேயிருப்பது கொஞ்சமும் நம்பகத்தன்மையைக் கூட்டவில்லை.

# இந்தியாவுக்காக இலங்கை எதையெல்லாம் செய்யவேண்டும்...?

*இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்போது அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் ரஜீவ்காந்தி இலங்கையின் அப்போதைய அரசதலைவர் ஜெ.ஆர். ஜெயவர்த்தனவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் எத்தகைய விடயங்கள் பரிமாறப்பட்டன. அந்தக் கடிதத்தை ஏற்று ஜெ.ஆர். ஜெயவர்த்தனா அளித்த பதில் என்ன என்பதை விளங்கிக் கொள்ளும் பொருட்டு அந்தக் கடிதம் மொழி மாற்றம் செய்யப்பட்டு வாசகர்களுக்கு இங்கு தரப்படுகிறது.*

**சிறீலங்கா குடியரசுத் தலைவர் அவர்களுக்கு**
**மாட்சிமை பொருந்தியவரே,**

ஜூலை 29, 198 தேதியிட்ட தங்கள் கடிதத்தை நினைவுகூர வேண்டுகிறேன். அதில் குறிப்பிடப்பட்டி ருப்பதாவது-

மாட்சிமை பொருந்தியவரே,

1-இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நமது இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள நட்புறவைப் பற்றிய விழிப்புணர்வுடனும், நமக்குள்ள இந்தப் பாரம்பரிய நட்புறவைப் பேணுவதை அங்கீகரித்தும், இந்தியா, சிறீலங்கா இரு நாடுகளும், தமது பரஸ்பரப் பிரதேசங்கள், தமது ஒருமைப்பாடு, பிரதேச ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காது என்பதை மீளுறுதி செய்து கொள்கின்றன.

2-இக்கருத்தை ஏற்று, நமது விவாதங்களின்போது, இந்தியாவின் நன்மைகளைக் கருத்தில்கொண்டு நீங்கள் செயற்படுவதாக ஒத்துக்கொண்டுள்ளீர்கள். அதன்படி -

2.1 - மாட்சிமை பொருந்திய தாங்களும், நானும் அந்நிய இராணுவத்தினர் மற்றும் உளவுத்துறை யினரின் தேவையையும் பயன்படுத்துதலையும் பற்றிய ஒரு புரிதலை, அவற்றின் செயற்பாடுகள் இந்தியா சிறீலங்கா உறவுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் அமையாது என்ற கண்ணோட் டத்துடன் விரைவில் அடைவோம்.

2.2-திருகோணமலை மற்றும் சிறீலங்காவின் இதர துறைமுகங்கள் இந்தியாவின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் எந்த ஒரு நாட்டின் இராணுவ வசதிக்காகவும் அளிக்கப்படமாட்டாது.

2.3-திருகோணமலை எண்ணைக் கிடங்குகளைச் சரிசெய்து பயன்படுத்தும் செயல் இந்தியா, சிறீ லங்கா அரசுகளின் கூட்டு நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும்.

2.4-அந்நிய ஒலிபரப்பு நிறுவனங்களுடன் சிறீலங்கா அரசு ஏற்படுத்திக்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அவை பொது ஒலிபரப்பு அன்றி இராணுவம் மற்றும் உளவுச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தமாட்டாது என்பது உறுதி செய்யப்படும்.

3- இதே கருத்தின் அடிப்படையில் இந்தியாவானது -

3.1- பிரிவினை மற்றும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துச் செயல்படும் மற்றும் பயங்கர வாதச் செயல்களில் ஈடுபடும் சிறீலங்காவைச் சேர்ந்த குடிமக்களை நாடுகடத்தும்.

3.2-சிறீலங்கா இராணுவத்தினருக்கு ஆயுதப்பயிற்சி மற்றும் இராணுவத்தளவாடங்களை வழங்கும்.

4-இந்தியாவும் சிறீலங்காவும் மேற்கண்டவாறு (பிரிவு 1 காண்க) தமது பொது நலன்களைப் பேணிக்

காக்கவும், தொடர்ந்தும் கண்காணிக்கவும் இக்கடிதத்தில் காணப்பட்டுள்ள பிற விசயங்களைக் குறிப்பா கக் கண்காணிக்கவும், கூட்டு ஆலோசனை அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளும்.

**5-**மேற்கண்டவை நமக்குள் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைச் சரியாக வரையறுத்துள்ளன என்பதை எனக்கு நீங்கள் உறுதிசெய்ய வேண்டுகிறேன். மாட்சிமை பொருந்தியவரே, எனது மேலான ஒத்துழைப்பைத் தாங்கள் ஏற்க வேண்டுகிறேன்.


தங்கள் உண்மையுள்ள
ராஜீவ்காந்தி
(ஒப்பம்)


பெறுநர் மாட்சிமை பொருந்திய திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா
சிறீலங்கா ஜனநாயகச் சோசலிசக் குடியரசுத் தலைவர்
கொழும்பு


நமக்குள் ஏற்பட்டுள்ள புரிதலை மேற்கண்டவை சரியாகவே வரையறுத்துள்ளன என்பதை உறுதிசெய்கிறேன்.
மாட்சிமை பொருந்தியவரே, எனது மேலான ஒத்துழைப்பைத் தாங்கள் எற்கவேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
ஜே.ஆர்.ஜெயவர்த்தனா
(ஒப்பம்)

பெறுநர்
மாட்சிமை பொருந்திய திரு.ராஜீவ்காந்தி
இந்தியக் குடியரசின் பிரதமர்
புதுடில்லி.







இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781